**EDUZONE: International Peer Reviewed/Refereed Multidisciplinary Journal (EIPRMJ), ISSN: 2319-5045**
**Volume 11, Issue 2, July-December, 2022, Available online at: www.eduzonejournal.com**

# திருமுருக கிருபானந்தவாரியாரின் ஆன்மீக பணிகள் (உலக நாடுகள்)

**போ. சித்ராதேவி**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)**
**தமிழ்த்துறை**
**த.கி.மு. மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**
**வேலூர் – 1**

## முன்னுரை

வாரியார் அவர்கள் இந்த சமுதாயம் தழைத்தோங்க, பல்வகையான பணிகளை மேற்கொண்டார்.அப்பணிகளில் அவர் சிறந்ததாகக் கருதியது ஆன்மீகப்பணியே ஆகும். அவர் எழுதியுள்ள ஆன்மீகக் கட்டுரைகளும், அவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகளும், அவர் செய்த திருக்கோயில் திருப்பணிகளுமே அவருடைய ஆன்மீகப் பணியைப் பறைசாற்றுகின்றன. சமயத்திற்கு அவர் ஆற்றிய ஆன்மீகப் பணிகளைப் பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கிருபானந்த வாரியார்

மல்லையதாசர் – கனகவல்லி அம்மையார் தம்பதியினருக்குப் பதினொரு குழந்தைகள். ஆவணித் திங்கள் ஒன்பதாம் நாள் வெள்ளிக்கிழமை ஒரு ஆண் குழந்தைப் பிறந்தது. அவர் தான் திருமுருக கிருபானந்த வாரியார் ஆவார். கருவிலே திருவுடன் பிறந்த வாரியார் ஐந்து வயது நிரம்பியபொழுதே நூல்களை எடுத்துத் தானே படிக்கும் அளவிற்குக் கல்வியில் தேர்ச்சிப்பெற்றவர். எட்டு வயதில் வெண்பா பாடுகின்ற ஆற்றல் அமைந்தது.

சிறந்த முருக பக்தர். நாள்தோறும் ஆன்மீக சொற்பொழிவுகளை நிகழ்த்துவதையே தவமாகக்கொண்டு வாழ்ந்தவர். சமயம், இலக்கியம், பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமைப்பெற்றவர். தன் தாய்மாமா சிவகுரு முதலியார் மகள் அமிர்தலட்சுமியைப் பத்தொன்பதாம் வயதில் திருமணம் செய்துக்கொண்டார். அருணகிரிநாதரிடம் மிகுந்த பற்று கொண்டு விளங்கியவர். இயலோடு இசையும் வாரியாருக்கு அவரது தந்தையாரால் கற்பிக்கப்பட்டது. தமிழ் இலக்கணம், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், சரித்திரக் கீர்தனைகள் முதலியவற்றைத் தந்தையே குருவாக இருந்து சொல்லிக்கொடுத்தவர். 2021ஆம் ஆண்டிலிருந்து இவரது பிறந்தநாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார். அவரின் சமய பணிகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**EDUZONE: International Peer Reviewed/Refereed Multidisciplinary Journal (EIPRMJ), ISSN: 2319-5045**
**Volume 11, Issue 2, July-December, 2022, Available online at: www.eduzonejournal.com**

**ஆன்மீகம்**

ஆன்மீகம் என்றால் நெற்றியில் விபூதி அணிந்து , எந்நேரமும் இறைவனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டும் , பலர் பார்க்கும்படி கோயிலுக்கு நன்கொடை செய்வதும் , அடுத்தவருக்கு பலர் முன்னிலையில் உதவி செய்வது மட்டுமல்ல. மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல் , அடுத்தவருக்கு நல்லது செய்யாவிட்டாலும் , கெடுதல் செய்யாமல் மனசாட்சிக்கு பயந்து வாழ்வது ஒருவகை ஆன்மீகம். அடுத்ததாக, பல மணி நேரம் வேறு பல சிந்தனையுடன் பூஜை செய்யாமல் , இறைவனை ஒரு நிமிடம் வணங்கினாலும் எந்தவித சிந்தனையுமின்றி ஆத்மார்த்தமாக வணங்கி , எனக்கு உன்னை தவிற வேறு யாரும் தெரியாது , உன்னை தவிற வேறு யாரும் கிடையாது அனைத்தும் நீயாக இருக்கிறாய் , இந்த உடலை நீயே வழிநடத்தி செல் , என இறைவனிடம் சரணடைந்து விட்டு நமது கடமைகளை மிகச்சரியானதாக செய்வது ஒரு வகை ஆன்மீக வாழ்க்கை.

நமக்கு ஏற்படும் நன்மைகளுக்கும் , தீமைகளுக்கும் நாமே பொறுப்பு. அனைவரிடமும் அன்பாக பேசுதல் , அனைவருக்கும் நன்மை செய்தல் , அனைவரையும் மரியாதையுடன் நடத்துதல், எதற்குமே ஆசைப்படாமல் இருத்தல் , நமது வலது கையில் செயல் திறமை உள்ளது, அதை மிகச் சரியாக செய்து உண்மையாக வாழ்ந்தால் , இடது கையில் வெற்றி தானாகவே வந்து சேரும். இது ஒரு வகை ஆன்மீக வாழ்க்கை.

இறைவனுக்கு நீங்கள் பிரசாதம் செய்து , படையலிட்டு, மிகப்பிரமாண்டமான பூஜை செய்ய வேண்டும் என்பதெல்லாம் இல்லை. அதை அவன் விரும்புவதும் இல்லை. அவன் விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்று தான். அது தான் உண்மையான பக்தி.

இறைவனுக்கு நம் உள்ளத்தின் ஒரு சிறு ஓரத்தில் உண்மையான பக்தியை வைத்து , சதா சர்வ காலமும் அவனை நினைத்து , எந்த செயல் செய்தாலும் , அது அவனால் தான் செய்யப்படுகிறது, என்ற நினைப்புடன் செய்து , அந்த செயலின் பலனை அவனுக்கு சமர்ப்பணம் செய்து வாழ்ந்து வந்தால் அதுவே உச்சகட்ட ஆன்மீகம்.

கடவுள் அனைத்திலும் இல்லை. ஆனால் அனைத்துமே கடவுளாக இருக்கிறார் என்ற பழமொழி ஒன்று உண்டு. இதன் அடிப்படையில் இந்த உலக உயிர்களுக்கு உங்களால் இயன்ற உதவி செய்து , அதற்கான பலனை எதிர்பார்க்காமல் , வாழ்ந்து வந்தால் , மிகச்சரியான பாதையில் இறைவனை நீங்கள் நெருங்கி கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

**உலக நாடுகளில் ஆன்மீகத் தொண்டு**

**அமெரிக்காப் பயணம்**

வாரியார் 24.4.1886 முதல் 29.07.1886 வரை அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டார். “நியூஜெர்சி மாநிலத்தில் மிடில் டவுன் பகுதியில் வாழ்பவரான டாக்டர் குமரேசனின் அன்பழைப்பை ஏற்று அமெரிக்கா சென்ற வாரியார் பல மாநிலங்களில் பற்பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அமுதத் தமிழை அள்ளித் தெளித்தார். பால்டிமோர், டெம்பா, ரெட்கோர்ஸ் முதலிய பல்கலைக்கழகங்களில் உரையாற்றினார். சுவாமி விவேகானந்தர் இந்து தர்மத்தை எடுத்துரைத்து அமெரிக்காவையே அதிசயிக்க வைத்த இடமாகிய சிகாகோவில் லெமண்டு இஸ்லினோயில் என்னும் இடத்தில் இராமர் கோயில் மூன்று கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பெற்றுக் கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்தது. வாரியார் அதில் கலந்துகொண்டார். ஓய்வு கிடைத்த நேரங்களில் திருப்புகழுக்கு உரை எழுதி வந்தார். 30.07.1886இல் தாயகம் திரும்பிய வாரியாருக்குப் பாராட்டுவிழா சிறப்புற நடந்தது”[1] என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**மலேசியாப் பயணம்**

“02.12.1886 முதல் மலேசியாப் பயணத்தை மேற்கொண்டார். அங்குள்ள தமிழர்களின் தெய்வ பக்திக்குத் தூண்டுகோலாக நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று சொற்றமிழ்ப் பாடி சுகமூட்டி வந்தார்.”[2]

**சுவிட்சர்லாந்து பயணம்**

“பொங்கல் விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டுச் சுவிட்சர்லாந்துக்கு ஒரு நாள் பயணமாக 14.1.1990இல் வாரியார் சென்று வந்தார். சென்றது கிருத்திகையில்; திரும்பியது சஷ்டியில். எப்பொழுதும் விரதத்துடனே சென்று பொங்கல் விழாவில் கலந்துகொண்டு, விரதத்துடனேயே திரும்பியிருக்கின்றார். ‘நண்பகல் பலவுடன் கழிந்த உண்டியர்’ என்று நக்கீரர், நம் சுவாமிகளை நினைத்துப் பாடியிருப்பாரோ?”[3] என்ற எண்ணம் தோன்றும் அளவுக்கு இவருடைய பயணம் அமைந்துள்ளது.

**இலங்கைப் பயணம்**

பின்னர், “வாரியார் 12.2.1993 முதல் 22.2.1993 முடிய இலங்கையில் பயணம் மேற்கொண்டார். பத்தாண்டுகளுக்கு முன்பு பிரதமராக இருந்து வரவேற்ற பிரேமதாசா, தற்பொழுது மக்கள் தலைவராக இருந்து, நம் மகானை வரவேற்றார். இந்தப் பயணத்தில், திரு.வி.டி.வி.தெய்வநாயகத்தின் ஏற்பாட்டில், திருப்புகழ் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டார்.”[4]

**இலண்டன் பயணம்**

இலண்டன் மாநகரத்தில் முருகன் கோயில் திருப்பணிகளுக்கு உதவுமாறு வாரியாரை அழைத்தார்கள். இந்தியாவில் பல திருத்தொண்டுகளில் ஈடுபட்டிருக்கின்ற வாரியார், மேலைநாடு போவதை விரும்பவில்லை. ஆனாலும், அவருடைய நண்பர் ஜெமினி ஆர்.இராமமூர்த்தி அவர்கள் 'தாங்கள் அவசியம் மேலைநாடுகளுக்குப் போய் வரவேண்டும். தமிழும் சமயமும் பரவாத அந்த நாடுகளில் தங்கள் தொண்டு இன்றியமையாதது' என்று வற்புறுத்திப் போகுமாறு எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

அதன்படி "1.8.1978இல் இலண்டன் மாநகரம் சென்றார். இலண்டன் முருகன் திருப்பணிக்குத் தலைவர் அரங்கநாதன் அவர்கள் இல்லத்தில் தங்கினார். அரங்கநாதனும் அவர் மனைவியும் எல்லையில்லாத அன்புடன் உபசரித்தார்கள். இலண்டனில் ஏழு நாட்கள் தமிழையும், சமய நெறிகளையும் வாரியார் கூறியது பசித்தவனுக்கு உணவு தந்ததுபோல் இருந்தது."[5]

மேலும், "1993ஆம் ஆண்டில் நவராத்திரி விழாவில் பங்கு கொள்ள வேண்டுமென்று வாரியாரை, சுவிட்சர்லாந்து அன்பர்கள் அழைத்தனர். அந்நாடுகளுக்குச் செல்லும் வழி இலண்டன். எனவே, அங்கும் தங்கித் தமிழ்த்தொண்டு செய்துவிட்டுச் செல்லும்படியாகப் பயணத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இப்பயணத்தால் வரும் வருவாயைத் தம் பெயரால் ஏற்படுத்தப்பட்ட பொதுநலநிதிக்குத் தந்துவிடுவதாக வாரியார் கூறினார். வழிபாடு முடித்துப் பயணத்துக்குத் தயாரானார். கார் வந்தது; காரும் வந்தது. அடைமழையும் ஆரம்பமானது. அன்றிரவு 10.30 மணியளவில் இலண்டன் ஷீத்ரு விமான நிலையத்தில் விமானம் இறங்கியது. குளிர் வாரியாரின் உடம்பைத் தாக்கியது. வீட்டிலுள்ளவர்களை விசாரித்துவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டார்.

வாரியார் பயணத்துக்குத் தயாராகச் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி இருக்கின்றார். பிறந்த மண்ணுக்குப் போகின்றோம் என்ற ஆர்வம் அவர் முகத்தில் தெரிந்தது. இரவு 11 மணிக்கு விமானம் புறப்படுகின்றது. 7.11.1993 அதிகாலை 4.30 மணிக்கு டில்லி வழியாக பம்பாய் வந்தது. பம்பாய்க்கு ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்ததால், பலர் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர். பம்பாயில் சென்னை செல்ல விமானம் மாற வேண்டும். காலை 6 மணிக்கு விமானம் புறப்பட்டது."[6]

**முடிவுரை**

இவ்வாறு தங்கள் ஆன்மீகப் பயணங்களை உலக நாடுகளுக்கும் சென்று ஆற்றி வந்த வாரியாரின் உயிர் விமானத்திலேயே பிரிந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகவும்,

வருத்தத்திற்குரியதாகவும், உலக உயிர்களுக்கு பெரும் இழப்பாகவும் அமைந்தது என்று கூறினால் மிகையாகாது!

**அடிக்குறிப்புகள்**

1. கிருபானந்த வாரியார், கிருபானந்த வாரியார் வாழ்க்கை வரலாறு, ப.321
2. மேலது, ப.322
3. மேலது, ப.322
4. மேலது, ப.323
5. கிருபானந்த வாரியார் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், வாரியார், ப.146-47
6. கிருபானந்த வாரியார் படைப்புகள் – ஓர் ஆய்வு, இரா. இராசகோபால், ப.15-16)

**துணைநூற்பட்டியல்**

1. **திருமுருக கிருபானந்த வாரியார்** - **கிருபானந்தவார்யார் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்,** குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், 132/107, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை – 600002.

2. **இரா.இராசகோபால்** - **கிருபானந்தவாரியார் படைப்புகள் – ஓர் ஆய்வு** முனைவர் பட்ட ஆய்வேடு - 1996 பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.